A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 96 / 2022**

திரு.ந.கணேசன்,
எண்.1/241, காமராஜர் தெரு,
கீழப்பட்டமுடையார்புரம்,
ஆலங்குளம் வட்டம் – 627 853.
தென்காசி மாவட்டம்.

………மேல்முறையீட்டாளர்
(திரு.ந.கணேசன்)

எதிர்

உதவி மின்பொறியாளர்/கிராமப்புறம்/ஆலங்குளம் ,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. உதவி மின்பொறியாளர் / பகிர்மானம்,
ஆலங்குளம் – 627 851.

. . . எதிர்மனுதாரர்கள்
திரு.வேலாயுதம், உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ ஆலங்குளம் திரு.F.ஜான் ப்ரிட்டோ, செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ கிராமப்புறம்/திருநெல்வேலி

**மனு பெறப்பட்ட நாள்: 17-11-2022**

**கேட்புரை நாள்: 25-01-2023**

**ஆணை நாள்: 06-02-2023**

17.11.2022 அன்று பெறப்பட்ட திரு.ந.கணேசன், எண்.1/241, காமராஜர் தெரு, கீழப்பட்டமுடையார்புரம், ஆலங்குளம் வட்டம் – 627 853 தென்காசி மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 96/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 25.01.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில்

எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தனக்கு சொந்தமான புஞ்சை ச.எண்.280/4ஏ, 4பி, 5ஏல் உள்ள போர் கிணற்றுக்கு III–A (1) விவசாய மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

## 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனக்கு சொந்தமான புஞ்சை ச.எண்.280/4ஏ, 4பி, 5ஏல் உள்ள போர் கிணறுக்கு இலவச மின் இணைப்பு வேண்டி வழங்கப்பட்ட விண்ணப்பம் காத்திருப்பில் இருந்ததால் அறிவுறுத்தலின் பேரில் III–A (1) விவசாய மின் இணைப்பு கோரி விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் மதீப்பீடு அனுமதியானது அளிக்கப்பட்டு மதீப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் கட்டியுள்ளார் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 மின் இணைப்புக்கான விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொழுது அருகில் உள்ள விவசாய மக்கள் மின்கம்பம் நடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் அதனை மேல்முறையீட்டாளரை சரி செய்ய கேட்டுக்கொண்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.4 மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்தை 23–7–2022 அன்று அணுகியுள்ளார்.

2.5 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் 01.09.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 மன்றத்தின் தீர்வு :

3.1 திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 01.09.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*இருதரப்பு வாதங்களையும் மன்றம் தீர ஆராய்ந்ததில் மனுதாரருக்கு விரிவாக்க பணியை மேற்கொள்ள பாதை சம்பந்தமாக தாவா இருப்பதாலும், மேலும் சட்டஒழுங்கு பிரச்சனை ஏற்படுவதாலும் மனுதாரர் ஆட்சேபனைதாரர்களிடம் இணக்கமா பேசி, அவர்களிடம் ஒப்புதல் பெற்றோ அல்லது காவல் துறையில் புகார் அளித்து காவல் துறை துணையுடன் பணிகள் மேற்கொள்ள முன்வந்தால் மனுதாரருக்கு வாரியதரப்பில் முழுஒத்துழைப்பு வழங்கப்பட்டு அவரின் கோரிக்கை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மன்றம் தீர்வு செய்கிறது.*

*முடிவுரை:*

*மனுதாரர் மின்பாதை அமைக்க ஏற்பட்ட ஆட்சேபனையை நிவர்த்தி செய்து தரும்பட்சத்தில் மின்பாதை அமைத்து மின்னிணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மன்றம் தீர்வு செய்து மனுவானது முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 25.01.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு.ந.கணேசன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு.வேலாயுதம், உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ ஆலங்குளம் மற்றும் திரு.F.ஜான் ப்ரிட்டோ, செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ கிராமப்புறம்/திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள்

சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் 2020ல் இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணபித்ததாகவும், இலவச விவசாய மின் இணைப்பு கோரிய விண்ணப்பம் நிலுவை எண் Pty No.307-20/21 TSI விவரப்படி விண்ணப்பம் வரிசைக் கிரமப்படி காத்திருப்பில் உள்ளதாகவும், மின் இணைப்பை எதிர்பார்த்து டீசல் பம்ப் செட் மூலமே குறைந்த அளவில் விவசாயம் செய்து தென்னை, வாழை, வேம்பு மற்றும் சில கன்றுகள் பராமரித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 இலவச விவசாய மின் இணைப்புக்கான காத்திருப்பு நீளும் என அறிந்ததாலும், சுயநிதி திட்டத்தின் கீழ் தன்னால் பெருந்தொகை செலுத்தி மின் இணைப்பு பெற இயலாததாலும், அறிவுறுத்தலின் பேரில் 3ஏ1 விண்ணப்ப நாள் 23.3.2022-இல் கண்டபடி 3ஏ1 தற்காலிக விவசாய மின் இணைப்பு கோரி விண்ணப்பித்ததின் பேரில் sanction செய்யப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 JE ஆலங்குளம் (கிராமப்புறம்) அவர்கள் மின் கம்பம் நிறுவ ரூ.76,050/- செலுத்தச் சொல்லி estimate அனுப்பியது தனக்கு பேரதிர்ச்சியாக இருந்ததாகவும், தனது முறையீட்டுக்கு பதிலளித்த உதவி செ.பொ. அவர்கள் அண்டை நிலத்து உரிமையாளர்கள் வாய்மொழியாக கேட்டுக் கொண்டதால் மாற்றுப் பாதையில் விவசாய மின் இணைப்பு வழங்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் உடனே செலுத்தும்படியும் கேட்டுக் கொண்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 அந்த உறுதிமொழியின் பேரில் மாற்றப்பட்ட estimate கட்டணம் ரூ.53,260/- அன்றே செலுத்தப்பட வேண்டுமென நெருக்கடி தரப்பட்டும், படாத பாடுபட்டு மேற்படி

தொகையை 4.6.22 அன்றே செலுத்தி விட்டதாகவும், ஆனாலும் இணைப்புத் தரப்படவில்லை எனவும், மீண்டும் தாமதிக்கப்படுகிறதோ என்ற ஐயத்தின் பேரில் தான் செய்த முறையீட்டுக்கு பதிலளித்த உதவி செயற்பொறியாளர் அவர்கள் இம்முறை சற்றே மாற்றி விவசாய மக்கள் மின்கம்பம் நடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் மின் இணைப்புக்கான பணிகள் மேற்கொள்ள இயலவில்லை எனவும், மேல்முறையீட்டாளர் பாதை ஏற்படுத்தித் தந்தால் மின் இணைப்பு தரப்படும் என்பதாக கடிதத்தில் தெரிவித்ததாகவும், இந்த நிலையில் நான்கு மாதங்களாகி விட்டதாகவும், உள்நோக்கத்துடன் ஆட்சேபித்தவர்களும் தான் வேண்டிக் கொண்ட பிறகும் வாபஸ் பெறவில்லை மற்றும் இதனால் இணைப்பு தரப்படவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 தன்னுடைய விவசாயம் செய்யும் நிலத்தில் போர் கிணறு எடுத்துள்ளதாகவும், கிராம நிர்வாக அலுவர் இதற்குத் தேவையான அனைத்து சான்றுகளும் வழங்கியுள்ளதாகவும், அதன் பேரில்தான் நேரடி ஆய்வும் செய்யப்பட்டு தனது இலவச விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் ஏற்கப்பட்டதாகவும் அது தற்போது காத்திருப்பில் உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 ஆட்சேபிக்கும் தனது அண்டை நிலத்தார் யாரும் விவசாயிகள் அல்ல எனவும், அவர்கள் ஆட்சேபனைக் கடிதத்திலேயே குருவன் கோட்டை காந்தி தெரு ஜெயகிருஷ்ணபதி கோழிப்பண்ணை நடத்துவதாகவும் மேற்படியூர் மாணிக்கராஜ் ரைஸ்மில் நடத்தி வருவதாகவும், குறிப்பன்குளம் முத்து அரசன் வெல்டிங் ஒர்க்ஸ் நடத்துவதாகவும், இவர்கள் தனக்கு மேற்கே நெட்டூர் ரோட்டை ஒட்டியுள்ள நிலத்தில் தொழில் செய்பவர்கள் எனவும், தன்னிலிருந்து கிழக்கிலோ பல கி.மீ. தூரம் விவசாய நிலங்கள் எனவும், இவர்களை விவசாய மக்களாக எப்படிக் கருதுகிறார் என்பது தனக்கு விளங்கவில்லை எனவும், அப்படியே இருந்தாலும் அவர்களின் ஆட்சேபனை சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல எனவும், ஏனெனில் நாடு முன்னேற தொழில் வளம் எவ்வளவு அவசியமோ, அதற்கு சற்றும் குறைவில்லாதது விவசாய வளர்ச்சி என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 29.4.22 தேதியிட்ட கடிதத்தில் அண்டை நிலத்து உரிமையாளர்கள் தங்கள் நிலத்தின் வழியாக மின்பாதை அமைக்கக்கூடாது என்று வாய்மொழியாக கேட்டுக் கொண்டதால் மாற்று பாதையில் மின் இணைப்பு வழங்கப் போவதாகச் சொல்லி மதிப்பீட்டுத் தொகை செலுத்த அறிவுறுத்தியதன் பேரிலேயே தொகை செலுத்தியதாகவும், ஆனால் தொகை செலுத்தப்பட்ட பின்னர் 21.06.2022 தேதியிட்ட கடிதத்தில் விவசாய மக்கள் மின்கம்பம் நடுவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மேலும், பாதை ஏற்படுத்தித் தரும் பட்சத்தில் மின் இணைப்பு வழங்கப்படும் என தெரிவித்ததாகவும், ஆட்சேபிப்பவர்கள் ஒவ்வொருவரும் நெட்டூர் ரோடு வழியுடன் தொழில் செய்வதாகவும், தன்னுடையதோ விவசாய நிலம், வாய்க்கால் வழிதான் உள்ளதாகவும், மேலும் விவசாய நிலத்திற்கு பாதை போட்டு மின் இணைப்பு தருவது சாத்தியமில்லை என்பதை அனைவரும் அறிவர் எனவும் மாற்றாக தன்னைச் சுற்றியுள்ள தொழில் நிறுவனங்கள் வழி இணைப்பு தருவது எளிது எனவும் அதை பரிசீலிக்கவே இல்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 தொழிலதிபர்களின் உள்நோக்கம் கொண்ட போலியான, நியாயமற்ற ஆட்சேபனைகளைப் புறந்தள்ளி விவசாய நிலத்திற்கு III-A (1) விவசாய மின் இணைப்பு வழங்குவதற்கு சட்டமும், தர்மமும், நியாயமும் தன் பக்கம் உள்ளதாகவும், தனக்கு இணைப்பு தந்தால், தன்னைப் போல் செலவு செய்ய இல்லாத பல சிறு குறு விவசாயிகள் குறைந்த செலவில் அருகிலிருந்து இணைப்பு பெற முடியும் எனவும் இதன் மூலம் தரிசு நிலங்கள் மேம்படும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 தனது III-A (1) விண்ணப்ப நாள் 23.3.22 இன்றுடன் 4 மாதங்கள் நிறைவடைவதாகவும், தன்னால் முழு அளவில் விவசாயம் மேற்கொள்ள இயலவில்லை எனவும் ஆகவே, மாயமான்குறிச்சி கிராமப் புஞ்சை ச.எண். 280/4A, 4B, 5A கொண்ட தனது நிலத்திற்கு ஆலங்குளம் கிராமப்புற நிர்வாகம் இதற்கு மேலும் கால தாமதம் செய்யாமல் III-A (1) விவசாய மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 Arguments of the Respondent:

6.1 The Respondent has stated that a new agricultural application has been registered at Executive Engineer / Rural Tirunelveli office on 01.02.2022 by the applicant Thiru N. Ganesan (Petitioner) and it has been registered as Priority No 307/2021. Due to his essentiality he has requested and applied for tariff IIIAI (Agricultural allied activities) on 23.03.2022.

6.2 The Respondent has stated that subsequently necessary estimate has been evolved and got sanctioned vide San No: 14.626/A22/002/2022-23/dt 12.04.2022. A demand notice was issued to party on 04.06.2022. In response to the above demand notice the applicant paid Rs 53,760/- on 04.06.2022 vide P.R.No PGCICI436833818. Based on the payment, work order has been applied and got work order from the sanction authority. On 06.06.2022 the Respondent has taken the work to erect the pole and line but due to strong objection of Thiru S. Jeyakrishnan, the work could not be started on that day. Thiru S. Jeyakrishnan submitted the objection letter not to erect the pole through his land. The next day two other separate land owners Thiru R. Muthuarasan & S. Manicaraj also submitted their objection letter not to erect poles and lines through their lands. This matter was conveyed to the petitioner and requested him to solve ROW (Right of Way) problem. On 13.06.2022 and 14.06.2022 several steps were taken to erect the poles and lines in another route also but land owners consent objected to erect the pole through their land so that the work could not be completed on that day also.

6.3 The Respondent has stated that on the above circumstances the Respondent could not execute the line works on any direction. Meanwhile the applicant was requested to approach neighbour for permission to execute electric lines through their land boundary sides. But the petitioner didn't approach any of his neighbour to settle the issue. After attempting in all ways approached local police station for their supports. Even in presence of police, the public agitated to erect the poles in their land. In view of the above the applicant lodged a complaint in CGRF. This CGRF has decided the applicant to settle the right of way issues and to avail supply.

6.4 The Respondent has stated that subsequently the applicant lodged a complaint in the local police station. Based on complaint, enquiry was conducted by police inspector among petitioner and public. But amicable solution could not be arrived. The applicant Thiru N Ganesan has also covered his land with a fencing arrangement along his agricultural land. Now the neighbour land owners in all directions also laid fencing. The neighbour have started building works in their lands. Hence there is no pathway to extent the lines to the applicant. With the above circumstances only, they are unable to extent supply to the petitioner land.

**7.0 Appellant's Rejoinder on the Counter submitted by the Respondent:**

7.1 The Appellant has submitted that the 1st estimate was prepared for a huge sum of Rs.76,050/- which was objected by the petitioner since the same was more than the amount required for Tatkal scheme and complaint was lodged. Then only, the 2nd estimate was reduced to a sum of Rs.53,260/- requiring 6 poles out of which 3 poles at the cost of the petitioner. The Respondent assured immediate connection through alternate route after payment as found in letter dt 29-4-22. This fact was conveniently suppressed by the Respondent before the authorities. Hence, this petitioner requested the Hon'ble Authority to call for the records which will reveal all truth.

7.2 The Appellant has stated that however as an alternate, petitioner suggested another route through Govt land surrounded by Mutharasan and Manickaraj which requires totally 2 poles only viz., at, one in the land of consumer and the other in the Nettur road margin spanning to a distance of about 100 feet. Instead of providing connection as assured by letter dt 21.6.22, the Respondent instigated those persons and informed that written objections were received from them and insisted to arrange pathway.

7.3 The Appellant has stated that when the petitioner placed the fact that the same was not possible since except the roadside lands, no agri land has pathway and his land has UDS in the well, well surroundings and water ways upto the road, the Respondent threatened to freeze the huge amount deposited by the petitioner.

Since the petitioner failed in his numerous attempts to convince the objectors, finally he informed both the EB and REVENUE authorities that the objectors are encroachers of Govt. land and their objection was not supported with documentary evidence such as Patta. Without verifying the facts, the Respondent shoot-up another letter decisively informing that unless pathway is laid, connection will not be provided. Hence, the petitioner approached the CGRF requesting relief under Indian Telegraphic Act.

7.4 The Appellant has stated that the CGRF, in its order directed among others to seek police aid. All these times, the petitioner indulged in convincing the objectors and approached the police only after the direction from CGRF since approaching police will aggravate the issue. The Respondent twisting the facts as if the petitioner approached police instead of attempting to convince the objectors. It is the Respondent who never approached the police or revenue department refusing as it was none of his business.

7.5 The Appellant has stated that he strongly objects the use of the term "public" to refer the three objectors who are not lawful owners but encroachers of Govt. land. A mere perusal of records of the revenue department will prove the same. The Respondent stages a play as there was a police complaint prior to CGRF direction and "public" agitated in the presence. No such incident taken place at all and the Respondent official is put to strict proof of the same.

7.6 The Appellant has stated that the averment about fencing of land and construction activities of neighbours, is not at all correct and relevant. In fact, the encroachers Mutharasan and Manickaraj removed their fencing over the Govt. land at the instructions of the revenue authorities and there is no bar to the Respondent to verify the facts with them for which the Respondent refuses saying that those were none of his business.

7.7 The Appellant has stated that the pending AP 96/2022, the Respondent caused letter dt 5-12-23 threatening to cancel the petitioner's application for service connection if he failed to form pathway which is nothing but a motivated, unnecessary and unlawful action by Respondent.

7.8 The Appellant has prayed to reject the parawar reply of the Respondent and direct him to provide the petitioner agricultural electricity connection without further delay and impose fine upon the Respondent for his unlawful and legal refusal to provide service connection.

## 8.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

8.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

8.2 மேல்முறையீட்டாளர் திரு.ந.கணேசன், இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி 2020–ல் விண்ணப்பித்துள்ளார். அந்த விண்ணப்பமானது செயற்பொறியாளர் கிராமப்புரம் /திருநெல்வேலி அவர்களது அலுவலகத்தில் வரிசை எண்.307/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. இலவச விவசாய மின் இணைப்புக்கான விண்ணப்பம் வரிசைக் கிராமப்படி காத்திருப்பில் உள்ளதாகவும், சுயநிதி திட்டத்தின் கீழ் தன்னால் பெருந்தொகை செலுத்தி மின் இணைப்பு பெற இயலாது என்பதால் அறிவுறுத்தலின் பேரில் வேளாண் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கான விவசாய மின் இணைப்பு III–A (1) கோரி 23.03.2022இல் விண்ணப்பித்துள்ளார்.

8.3 அதனை தொடர்ந்து எதிர்மனுதாரர் மின்கம்பம் நிறுவ ரூ.76,050/– செலுத்த சொல்லியதாகவும் மேலும் மேல்முறையீட்டாளர் அத்தொகை அதிகமாக இருப்பதாக முறையிட்டதன் பேரில் மீண்டும் மாற்று பாதையில் தேவையான மதிப்பீடு தயார் செய்து, அனுமதி பெற்று 04.06.2022 அன்று Rs.53,760/– கட்டணம் செலுத்த நோட்டீஸ் அனுப்பியதாகவும் அத்தொகையினை அன்றே செலுத்திவிட்டதாகவும் ஆனாலும் இணைப்பு தரப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் 06.06.2022 அன்று III–A (1) விவசாய மின் இணைப்பு வழங்க விஸ்தரிப்பு பணியை மேற்கொள்ளும் போது திரு.எஸ்.ஜெயகிருஷ்ணன் என்பவர் தன்னுடைய நிலத்தின் வழியாக மின்கம்பம் நடுவதற்கு கடுமையாக ஆட்சேபனை தெரிவித்ததாகவும் மறு நாள் மற்ற நிலத்தின் உரிமையாளர்கள் மேலும் இரண்டு நபர்கள் திரு.ஆர்.முத்தரசன் மற்றும் திரு.எஸ்.மாணிக்கராஜ் தங்களின் நிலத்தின் வழியாக மின்கம்பம் நடுவதற்கு

கடுமையாக ஆட்சேபனை தெரிவித்ததாகவும் எனவே மின்கம்பம் நடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் மின் இணைப்புக்கான பணிகள் மேற்கொள்ள இயலவில்லை எனவும், மேல்முறையீட்டாளர் பாதை ஏற்படுத்தித் தந்தால் மின் இணைப்பு தரப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

8.4 மேல்முறையீட்டாளர், தன்னுடையது விவசாய நிலம் எனவும், வாய்க்கால் வழிதான் உள்ளதாகவும், மேலும் விவசாய நிலத்திற்கு பாதை போட்டு மின் இணைப்பு வழங்குவது சாத்தியமில்லை எனவும் தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் 13.06.2022, 14.06.2022 ஆகிய தேதிகளில் மின் கம்பம் நடுவதற்கு பல்வேறு முயற்சிகள் எடுத்ததாகவும் ஆனால் அருகில் உள்ள நிலத்தின் உரிமையாளர்கள் அவர்களின் நிலத்தின் வழியே மின்கம்பம் நடுவதற்கு பலத்த எதிர்ப்பு தெரிவித்ததன் காரணத்தினால் III–A (1) விவசாய மின் இணைப்பு வழங்க விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ள இயலவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

8.5 மேல்முறையீட்டாளர் கூடுதலாக சமர்ப்பித்த எதிர்மனுதாரரின் வாதத்திற்கு மறுப்பில் (Rejoinder of Counterல்) மின்கம்பம் நடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட நிலம் உள்ளாட்சிக்கு சொந்தமான பொது வழி நடைபாதை என்றும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அந்த நிலத்தின் உரிமையாளர்களே அல்ல என்றும் அக்கிரமிப்பாளர்கள் என்றும் அவர்களின் ஆட்சேபனைக்கு பட்டா போன்ற ஆவண ஆதாரங்கள் ஏதும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

8.6 இவ்வழக்கு சம்பந்தமாக மின்கம்பம், மின்பாதை மற்றும் மின்மாற்றி போன்ற மின்தளவாடங்களை அமைக்கும் பணிகளை செய்வதற்கு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்குள்ள அதிகார விதிமுறைகளை ஆராய விரும்புகிறேன்.

8.7 மின்சார சட்டம் 2003, பிரிவு 164–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அனுமதி வழங்கி தமிழ்நாடு அரசாங்கம் G.O.(Ms)No. 16 Energy (C3) Department, dated 23.02.2012–இல் ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, நான் இதுசம்பந்தமான விதிமுறைகளை

அறிந்துகொள்ள இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–ன் பிரிவு 10–ஐ ஆராய விரும்புகிறேன். சட்டத்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

***"Part III***

***Power to Place Telegraph Lines and Posts***

***10. Power for telegraph authority to place and maintain telegraph lines and posts:-***

*The telegraph authority may, from time to time, place and maintain a telegraph line under, over, along, or across, and posts in or upon any immovable property:*

*Provided that:-*

1. *The telegraph authority shall not exercise the powers conferred by this section except for the purposes of a telegraph established or maintained by the [Central Government], or to be so established or maintained.*

2. *The [Central Government] shall not acquire any right other than that of user only in the property under, over, along, across in or upon which the telegraph authority places any telegraph line or post; and*

3. *Except as hereinafter provided, the telegraph authority shall not exercise those powers in respect of any property vested in or under the control or management of any local authority, without the permission of that authority; and*

4. *In the exercise of the powers conferred by this section, the telegraph authority shall do as little damage as possible, and, when it has exercised those powers in respect of any property other than that referred to in clause (c), shall pay full compensation to all persons interested for any damage sustained by them by reason of the exercise of those powers."*

8.8 மேற்கண்டுள்ள இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–ன் பிரிவு 10–ன்படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதே சமயம் பிரிவு 10(4) –ன்படி ஒரு நபருக்கு சொந்தமான நிலத்தில் மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ அமைக்கப்படவேண்டிய நேர்வில் இந்திய தொலைத்தொடர்பு சட்டத்தின்படி நிலவுடமையாளருக்கு முழு நஷ்டஈடு தரப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

8.9 மேற்கூறிய இந்திய தொலைத்தொடர்பு சட்டத்தின் படி உரிமதாரர் பொது இடத்தில் மின் கம்பங்கள் நடலாம் என்பது உறுதியாகிறது. மேலும் இது சம்பந்தமாக கேட்புரையின் போது மின்குறைதீர்ப்பாளர் விசாரித்த போது எதிர்மனுதாரரும் அதனை ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் மேல்முறையீட்டாளருக்கு III–A (1) விவசாய மின்

இணைப்பு வழங்க பணிகள் மேற்கொண்டு மின் இணைப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

8.10 எனவே பொது வழி பாதையில் மின்கம்பங்கள் நட்டு மின் இணைப்பு கோரி விண்ணப்பித்த மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்க எதிர்மனுதாரரால் எடுக்கப்பட்ட முயற்சிகளை தடுக்க முயலும் அண்டை நிலத்தாரரின் நடவடிக்கை முறையற்ற செயலாக கருதப்படுகிறது.

8.11 இவ்வழக்கில் அண்டை நிலத்தாரரால் மின்கம்பங்கள் நிறுவ ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட இடமானது அவர்களுக்கு சொந்தமானது அல்ல என தெரியவருவதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை ஏற்று அவருக்கு வாரிய விதிமுறைப்படி விஸ்தரிப்பு பணிகள் மேற்கொண்டு III-A (1)இல் விவசாய மின் இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தீர்வு செய்கிறேன்.

9.0 <u>முடிவுரை</u>:

9.1 பத்தி 8-இல் உள்ள தீர்வுகளின்படி மின்கம்பங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள இடமானது பொது வழி பாதை என அறியப்படுவதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை ஏற்று அவருக்கு விவசாய மின் இணைப்பு III-A (1) வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தீர்வு செய்கிறேன்.

9.2 மேல்முறையீட்டாளருக்கு III-A (1) விவசாய மின் இணைப்பு வழங்கிய 15 நாட்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு அறிக்கையாக சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

9.3 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 96/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

**பெறுநர்**

1. திரு.ந.கணேசன், – By RPAD
எண்.1/241, காமராஜர் தெரு,
கீழப்பட்டமுடையார்புரம்,
ஆலங்குளம் வட்டம் – 627 853.
தென்காசி மாவட்டம்.

2. உதவி மின்பொறியாளர்/கிராமப்புறம்/ஆலங்குளம் ,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. உதவி மின்பொறியாளர் / பகிர்மானம்,
ஆலங்குளம் – 627 851.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
**திருநெல்வேலி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மகாராஜா நகர்,
திருநெல்வேலி – 627 011

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.